**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-25** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர்.திரு.விக்னேஸ்வரன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 11th day of September 2023.

(குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். 6ம் எதிரி கேசவன், 7ம் எதிரி அரவிந்த்குமார் (எ) அரவிந்த், 8ம் எதிரி தமிழரசன், 9ம் எதிரி அஜீத், 10ம் எதிரி செந்தில் (எ) செந்தில்ஈஸ்வரன், 12ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்.

5ம் எதிரி ரமேஷ் (எ) காவியா ரமேஷ், 11ம் எதிரி கலைச்செல்வன் ஆகியோர் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

1ம் எதிரி கோகுலகிருஷ்ணன் (எ) கோகுல், 2ம் எதிரி துரைப்பாண்டி (எ) பாண்டி, 4ம் எதிரி மணிகண்டன் (எ) R.S.மணி ஆகியோர் நீதிமன்றக்காவலில் திருச்சி மத்திய சிறையில் உள்ளனர். 1, 2, 4 எதிரிகள் திருச்சி மத்தியசிறைச்சாலையிலிருந்து காணொலி மூலமாக விசாரணையில் இணைக்கப்பட்டுள்ளது. 1, 2, 4 எதிரிகளின் வழக்கறிஞர்கள் ஆஜர்.

3ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு SPL.SC. 11/2023 நிலுவையில் இருந்து வருகிறது)

**முதல் விசாரணை**

நான் தற்போது சிதம்பரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதலாம்ஆண்டு அறுவை சிகிச்சை பட்ட மேற்படிப்பு பயின்று வருகிறேன். நான் 18.09.2020 அன்று அப்பல்லோ மருத்துவமனை, கரூரில் மருத்துவராக பணிபுரிந்து வந்தபோது, அன்றைய தினம் காலை 9.15 மணியளவில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது, கிருஷ்ணமூர்த்தி, 25 வயதுடையவரை வெட்டுங்காயங்களுடன் தினேஷ் என்பவர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக தனியார் ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து வந்தார். தினேஷ் என்பவரை விசாரித்தபோது, கிருஷ்ணமூர்த்தி என்பவரை அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் சேலம் புறவழிச்சாலையிலுள்ள இளநீர் கடையில் வைத்து அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு அருவாளால் வெட்டியதாக கூறினார். கிருஷ்ணமூர்த்தி என்பவர் பேசமுடியாத நிலையில் இருந்தார். கிருஷ்ணமூர்த்தியை நான் பரிசோதித்தபோது, அவரது தலையில் வெட்டுக்காயம் மற்றும் கழுத்தில் வெட்டுக்காயம், முதுகின் பின்புறத்தில் இரண்டு வெட்டுக்காயங்கள், இடது கை மணிக்கட்டில் ஒரு வெட்டுக்காயம், முகத்தில் ஒரு வெட்டுக்காயம், வலதுகை மணிக்கட்டின் அருகில் பெரிய வெட்டுக்காயம், வலது தொடையில் ஒரு வெட்டுக்காயம், இடது கை முட்டியில் ஒரு வெட்டுக்காயம் ஆகியவை காணப்பட்டது. அவருடைய நாடித்துடிப்பு மற்றும் இரத்தஅழுத்தம் எதுவும் இல்லை. எனவே அவருடைய வெட்டுக்காயங்களுக்கு தையல்போட்டு, முதலுதவி சிகிச்சையளித்தேன். அவருக்கு இரத்தம் அதிகமாக வெளியேறியிருந்ததால், அவருக்கு இரத்தம் செலுத்தப்பட்டது. எனினும் அவரது உடல்நிலையில் சிறிதும் முன்னேற்றம் அடையாத காரணத்தினால், எனது உயரதிகாரிகளின் ஆலோசனையின்பேரில் வேறு மருத்துவமனையில் சிகிச்சை எடுக்கலாம் என அறிவுறுத்தினேன். அவருக்கு செயற்கை சுவாசம் பொருத்தப்பட்டது. எனினும் அவர் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. நான் வேறு நோயாளியின் சிகிச்சைக்கு சென்றுவிட்டேன். மருத்துவமனை ஆவணங்களின்படி காலை 10.52 மணிக்கு அவர் இறந்துபோனார். மேலும், அவர் உடல் பரிசோதனைக்கு கரூர், அரசு மருத்துவமனைக்கு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. மேற்சொன்ன கிருஷ்ணமூர்த்திக்கு ஏற்பட்ட காயங்கள் நீதிமன்றத்தில் உள்ள சா.பொ.1, 2 ஆயுதங்களால் ஏற்படுத்த வாய்ப்புள்ளது. கிருஷ்ணமூர்த்தி என்பவரை …..

அனுமதித்தபோது, நான் பதிவு செய்த விபத்து பதிவேடு தாக்கல் செய்கிறேன். அது அ.சா.ஆ.19.

இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

18.09.2020 அன்று அப்பல்லோ மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் நான் பணியிலிருந்தேன். ஆபத்தான நிலையில் சிகிச்சைக்கும் வரும் உடன் வருகின்றவரிடம் என்ன நடந்தது என கேட்டு பதிவு செய்வது வழக்கம். ஆபத்தான நிலையில் வரும் நபர்களின் காயம் மற்றும் அதன் நிலை குறித்து பதிவு செய்ய வேண்டும். நான் காயமடைந்த கிருஷ்ணமூர்த்தி என்பவரின் உடலை பார்த்து அவருக்கு ஏற்பட்டிருந்த வெளிக்காயங்கள் அனைத்தையும் பதிவு செய்தேன். சிகிச்சைக்கு வரும் சட்டம்சார்ந்த மருத்துவ வழக்கு சம்மந்தப்பட்ட நபர், சிகிச்சையின்போது இறந்துபோனால் இறப்பு குறித்த தகவலை காவல்நிலையத்திற்கு தெரிவிக்க வேண்டும். கிருஷ்ணமூர்த்தி என்பவர் இறந்தவுடன் எங்கள் மருத்துவமனையிலிருந்து காவல்நிலையத்திற்கு தகவல் அளித்து கையெழுத்தும் பெற்றுள்ளேன். மருத்துவனையிலிருந்து காவல்நிலையத்திற்கு நான் அனுப்பிய தகவல் மெமோ என்னிடம் காட்டப்படுவதாகும். அது அ.சா.ஆ.23. கிருஷ்ணமூர்த்தி என்பவர் இறந்தவுடன் அதுகுறித்த சான்றும் நான் வழங்கினேன். அந்த சான்று என்னிடம் காட்டப்படுவதாகும். அது அ.சா.ஆ.24. விபத்து பதிவேட்டு நகல் மற்றும் இறப்பு தகவல் மெமோ ஆகியவற்றில் காயம்பட்ட கிருஷ்ணமூர்த்தி என்பவரை அவரது சகோதரர் தினேஷ் அழைத்து வந்தார் என குறிப்பிட்டுள்ளேன். அவரைத்தவிர வேறு நபர்கள் வந்தால் அவர்களை நான் குறிப்பேன் என்றால் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வருபவருடன் நிறைய நபர்கள் வருவார்கள். காயம் ஏற்பட்டது குறித்து யாருக்கு தெளிவாக தெரிகிறதோ அவரது பெயரை மட்டும் குறிப்பேன். போலீசார் என்னிடம் சா.பொ.1, 2 ஆயுதங்களை காட்டி விசாரித்தனர்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-26** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர்.திரு.அன்பழகன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 11th day of September 2023.

(குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். 6ம் எதிரி கேசவன், 7ம் எதிரி அரவிந்த்குமார் (எ) அரவிந்த், 8ம் எதிரி தமிழரசன், 9ம் எதிரி அஜீத், 10ம் எதிரி செந்தில் (எ) செந்தில்ஈஸ்வரன், 12ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்.

5ம் எதிரி ரமேஷ் (எ) காவியா ரமேஷ், 11ம் எதிரி கலைச்செல்வன் ஆகியோர் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

1ம் எதிரி கோகுலகிருஷ்ணன் (எ) கோகுல், 2ம் எதிரி துரைப்பாண்டி (எ) பாண்டி, 4ம் எதிரி மணிகண்டன் (எ) R.S.மணி ஆகியோர் நீதிமன்றக்காவலில் திருச்சி மத்திய சிறையில் உள்ளனர். 1, 2, 4 எதிரிகள் திருச்சி மத்தியசிறைச்சாலையிலிருந்து காணொலி மூலமாக விசாரணையில் இணைக்கப்பட்டுள்ளது. 1, 2, 4 எதிரிகளின் வழக்கறிஞர்கள் ஆஜர்.

3ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு SPL.SC. 11/2023 நிலுவையில் இருந்து வருகிறது)

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் எலும்பு முறிவு மருத்துவ அதிகாரியாக பணிபுரிகிறேன். நான் கடந்த 18.09.2020 அன்று பகல் சுமார் 11.30 மணியளவில் இதே மருத்துவமனையில் அவசரசிகிச்சை பிரிவில் மருத்துவ அதிகாரியாக பணியிலிருந்தபோது, திரு.கிருஷ்ணமூர்த்தி, த/பெ.குணசேகரன் என்பவர் உடம்பில் பல வெட்டுக்காயங்களுடனும் கழுத்து மற்றும் தலைப்பகுதியில் வெட்டுக்காயங்களுடனும், இறந்த நிலையில் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் அவரது மனைவி சுஷ்மிதா என்பவரால் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டார். அவரை நான் பரிசோதனை செய்து, அவரது உடலை உடற்கூறாய்வுக்காக மருத்துவமனை பிரேத கிடங்கிற்கு அனுப்பி வைத்தேன். அவரை மருத்தவமனைக்கு கொண்டு வந்தபோது, அவரது மனைவி சுஷ்மிதா என்பவர், தனது கணவர் அடையாளம் தெரியாத நபர்களால் கழுத்து மற்றும் தலைப்பகுதியில் வெட்டப்பட்டார் என கூறினார். நான் மேற்சொன்ன விவரங்களை விபத்து பதிவேட்டில் பதிவு செய்தேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.20. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.ஆ.20 ல் அடையாளம் தெரியாத ஐந்து நபர்கள் தாக்கியதாக பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் with unknown person என பதிவு செய்தேன். வழக்கிற்காக தற்போது with unknown person என பதிவு செய்தேன் என கூறுகிறேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில், இறந்துபோனவரின் மனைவி என்னிடம் அடையாளம் தெரியாத நபர்கள் கழுத்து மற்றும் தலை பகுதியில் வெட்டப்பட்டார் என கூறினார் என்பதை சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | | |
| | : | Prosecution - | **PW-27** | |
| Deposition of witness for | : | Defense | | |
| Name | : டாக்டர்.திரு.வினோத்கண்ணன் | | Father's Name : | |
| Village | : | | Taluk | : |
| Caste | : | | Calling | : |
| Religion | : | | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 11th day of September 2023.

(குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். 6ம் எதிரி கேசவன், 7ம் எதிரி அரவிந்த்குமார் (எ) அரவிந்த், 8ம் எதிரி தமிழரசன், 9ம் எதிரி அஜீத், 10ம் எதிரி செந்தில் (எ) செந்தில்ஈஸ்வரன், 12ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்.

5ம் எதிரி ரமேஷ் (எ) காவியா ரமேஷ், 11ம் எதிரி கலைச்செல்வன் ஆகியோர் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

1ம் எதிரி கோகுலகிருஷ்ணன் (எ) கோகுல், 2ம் எதிரி துரைப்பாண்டி (எ) பாண்டி, 4ம் எதிரி மணிகண்டன் (எ) R.S.மணி ஆகியோர் நீதிமன்றக்காவலில் திருச்சி மத்திய சிறையில் உள்ளனர். 1, 2, 4 எதிரிகள் திருச்சி மத்தியசிறைச்சாலையிலிருந்து காணொலி மூலமாக விசாரணையில் இணைக்கப்பட்டுள்ளது. 1, 2, 4 எதிரிகளின் வழக்கறிஞர்கள் ஆஜர்.

3ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு SPL.SC. 11/2023 நிலுவையில் இருந்து வருகிறது)

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிபுணராக பணிபுரிகிறேன். நான் கடந்த 17.09.2020 அன்று இதே மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவாக இரவு 9.00 மணியளவில் பணியிலிருந்தபோது, திரு.பிரேம்குமார், வயது 24, த/பெ. சண்முகம், வையாபுரி நகர், 2 வது குறுக்குத்தெரு, கரூர் என்பவர் அரவிந்த் என்பரால் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். பிரேம்குமார் என்பவர், தன்னை 17.09.2020 அன்று இரவு சுமார் 8.40 மணியளவில் அண்ணாநகர், வாத்தியார் காலனியில் வைத்து, அடையாளம் தெரிந்த இரண்டு நபர்களாலும், அடையாளம் தெரியாத நான்கு நபர்களாலும் இரும்பு கம்பியால் தாக்கப்பட்டதாக கூறினார். நான் பிரேம்குமாரை பரிசோதித்து பார்த்தபோது, அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

காயம் எண். 1 – நெற்றியில் 3 x 1 x 1 cm அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.
காயம் எண். 2 - இடது முன்கையில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.
காயம் எண். 3 - வலது தோள்பட்டையில் வீக்ககாயம் காணப்பட்டது.

நான் அவரை உள்நோயாளியாக அனுமதிக்க பரிந்துரைத்தேன். காயம்பட்ட பிரேம்குமார் உள்நோயாளியாக சிகிச்சை எடுப்பதற்கு விருப்பம் தெரிவிக்காத காரணத்தினால், அவரை புறநோயாளியாக சிகிச்சையளித்து விபத்து பதிவேட்டு நகல் பதிவு செய்தேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.21. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என காயச்சான்றிதழ் வழங்கினேன். அது அ.சா.ஆ.22. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வெட்டுக்காயமும், சிதைந்த காயமும் வெவ்வேறு வகையான காயங்கள். வெட்டுக்காயம் என்பது கூர்மையான ஆயுதத்தால் ஏற்படும். என்னிடம் காட்டப்படும் சீட்டானது காயம்பட்ட பிரேம்குமார் என்பவர் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்பதற்கு காவல்துறைக்கு நான் கொடுத்த தகவல் குறிப்பாணையாகும். அது அ.சா.ஆ.25. அ.சா.ஆ.21 ல் காயம்பட்ட பிரேம்குமார் என்பவர் உள்நோயாளியாக சிகிச்சை எடுக்க விருப்பமில்லை என்பதை நான் இடைச்செருகலாக சேர்த்துள்ளேன் என்றால் நான் அவரை விசாரித்து பதிவு .....

செய்தபிறகு, விருப்பம் இல்லை என கூறியதாலும், விபத்து பதிவேட்டு நகலில் இடம் இல்லை என்பதாலும் அவ்வாறு எழுதியுள்ளேன். அ.சா.ஆ.22 காயச்சான்றிதழில், காயம்பட்டவர் உள்நோயாளியாக சிகிச்சை எடுப்பதற்கு விருப்பமில்லை என குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. குறிப்பிட்டுள்ளேன். அ.சா.ஆ.21 விபத்து பதிவேட்டு நகலில் பிரேம்குமார் என்பவரை அழைத்து வந்த அரவிந்த் சொன்ன செல்போன் நெம்பரை பதிவு செய்துள்ளேன். 3 வது எதிரி பிரேம்குமார் என்பவர் சிகிச்சைக்கு வந்தார் என்றும், அவரை நானாகவே புறநோயாளியாக சிகிச்சையளித்தேன் என்றும், தற்போது வழக்கிற்காக அவர் உள்நோயாளியாக சிகிச்சையெடுக்க விருப்பமில்லை என சென்றுவிட்டார் என போலீசார் சொல்லிக்கொடுத்து சொல்கிறேன் என்றும், அதற்கேற்றாற்போல் நான் ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. காயத்துடன் வரும் நபர் சட்டம்சார்ந்த மருத்துவ வழக்கா என்பதை தெரிந்துக்கொள்வோம். சட்டம்சார்ந்த மருத்துவ வழக்குகள் சம்மந்தமாக காவல்துறைக்கு உடனடியாக தகவல் தெரிவிப்பது கடமையாகும். இவ்வழக்கில் காவல்துறைக்கு அச்சுப்படிவ தகவல் குறிப்பாணையில் தகவல் கொடுக்கவில்லை. அ.சா.ஆ.25 தகவல் குறிப்பாணை அதே தேதியில் வழங்கினேன். அ.சா.ஆ.25 வழக்கிற்காக பின்னால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. பொதுவாக அதே தேதியில் குறிப்பு அனுப்பும்போது இன்று என எழுதி அனுப்பப்படும். அ.சா.ஆ.25 ல் 17.09.2020 அன்று என வேறு தேதியில் நடந்ததுபோல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அவ்வாறு இருக்கலாம். ஆனால் அ.சா.ஆ.25 ல் அவ்வாறு இல்லை.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,<br>மாவட்ட அமர்வு நீதிபதி,<br>கரூர்.